DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 281/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : சண்முகவேல் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 30.10.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 30th **October2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் பானுமதி எனது சித்தி. எதிரிகள் ஆனந்த் மற்றும் வேலுச்சாமியை தெரியும். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் விசாரணையில், கடந்த 05.08.2015 ம் தேதி மாலை 6 மணிக்கு நானும், என் அம்மா ஜெயாவும், என் சித்தி பானுமதியும் பனையூர் முத்தாலம்மான்

கோவிலுக்கு சாமி கும்பிட சென்றபோது அங்கு வந்த எதிரிகள் என் அம்மாவையும், சித்தியையும் பார்த்து கெட்டவார்த்தையில் பேசி அவமானப்படுத்தினார்கள் என்றும், கம்பால் அடித்து காயப்படுத்தினார்கள் என்றும், எனது சித்தியின் சட்டையை பிடித்து இழுத்து அவமானப்படுத்தினார்கள் என்றும், எதிரிகள் கொலைமிரட்டல் விடுத்தார்கள் என்றும், மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்ததாக கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**